# தூய லூர்து அன்னை திருப்பீடம்

தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஒ.்.பியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624

நாள் 12 - 02 - 2017 இதழ் 12

(முதல் ஆண்டு)

## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

| | |
|---|---|
| திங்கள் முதல் வெள்ளி வரை | மதியம் 12:30 மற்றும் மாலை 6:30மணி |
| **சனி** | மாலை 6:00மணி மற்றும் மாலை 7:30மணி |
| **ஞாயிறு (ஆங்)** | காலை 7.30மணி,11.30மணி மற்றும் மதியம் 1:00மணி |
| **ஞாயிறு (தமிழ்)** | காலை 9:30மணி மற்றும் மாலை 6:30மணி |
| **ஞாயிறு (சிங்களம்)** | நண்பகல் 12:00மணி |
| **பொது விடுமுறை** | காலை 9:00மணி (ஆங்) காலை10:00மணி(தமிழ்) |

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு**

ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

## பொது காலம் 6ஆம் ஞாயிறு

**முதல் வாசகம் :**
சீராக் : 15:15-20

**பதிலுரைப் பாடல் :**
திபா : 119:1-2.4-5.17-18.33-34

**பல்லவி :** ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.

**இரண்டாம் வாசகம்:**
1 கொரி 2:6-10

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
அல்லேலூயா, அல்லேலூயா! தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கு இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:** மத்தேயு 5:17-37

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |



## இறைமக்கள் அனைவருக்கும் நமது பங்குத் திருவிழா நல்வாழ்த்துக்கள்.
## - பங்கு தந்தையர்



**புனித வின்சென்ட் தே பவுல் சபை**

புனித வின்சென்ட் தே பவுல் சபையின் வளர்ச்சிக்காக இம்மாதம் முதல் ஞாயிறு இறைமக்கள் அளித்த காணிக்கை $3,479.00 வெள்ளிகள். உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.
இம் மாதம் புனித வின்செண்ட் தே பவுல் சபையின் வழியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை $5,950.00 வெள்ளிகள்.

**சிங்கப்பூர் உயர் மறைமாவட்ட பேராலய அர்ப்பண விழா 14-02-2017 அன்று மாலை 7.00 மணிக்கு நடைபற உள்ளது.**

**15-02-2017 அன்று மாலை 7.30மணிக்கு நகர மாவட்ட இறைமக்கள் இணைந்து திருப்பலி நிறைவேற்றி பேராலய அர்ப்பண விழாவை சிறப்பிக்க உள்ளார்கள். நம் பங்கு மக்கள் அனைவரும் இவ்விரு நாட்கள் நடைப்பெறும் நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்போடு அழைக்கின்றோம்.**

**குறிப்பு : பிப்ரவரி 14 மற்றும் 15 ஆகிய நாட்கலில் மாலை 6.30 மணி திருப்பலி நம் ஆலயத்தில் நடைபெறாது.**

**GIFT திட்டத்திற்கான நினைவூட்டல்** அடுத்த வாரயிறுதியில், கத்தோலிக்க அடித்தள அமைப்பின் GIFT திட்டத்திற்கான உங்களது மாதாந்திரப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள இரண்டாம் காணிக்கை வசூலிக்கப்படும். GIFT (விசுவாசத்துடனும் நன்றியறிதலுடனும் கொடுத்தல்) திட்டமானது நமது உயர்மறைமாவட்டத்திலுள்ள குடும்பங்கள், இளையோர், மறைபரப்புப்பணி, கட்டடப்பணி போன்றவற்றுடன் தொடர்புள்ள பல்வேறு அமைப்புகள் திறம்படச் செயலாற்றத் தேவையான நிதியுதவியை நாம் தொடர்ந்து வழங்க ஆரம்பிக்கப்பட்ட திட்டம். ரொக்கமாகவோ காசோலையாகவோ கொடுக்க விரும்புவோர் உங்கள் பங்களிப்பை காணிக்கைப் பைகளில் போடவும். பின்னர் அவற்றை கத்தோலிக்க அடித்தள அமைப்பினர் பெற்றுக்கொள்வர். அல்லது, gift.catholicfoundation.sg என்ற இணைய தளத்திற்குச் சென்று மின்னியல் வழியாகவும் அளிக்கலாம். மேலும் விபரங்கள் அங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

# சிந்தனை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே,

இன்று பொதுக்காலம் ஆறாம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

மனிதர்களை விலங்குகளிடமிருந்து பிரிக்கின்ற ஒரு மாபெரும் கொடை சுதந்திரம். பறவைகளும், விலங்குகளும் அன்றிலிருந்தது போலவேதான் இன்றும் இருக்கின்றன.ஆனால், மனிதர்களால் மட்டுமே தங்களையும், தங்களைச் சுற்றியிருப்பவற்றையும் மாற்ற முடியும். இதற்குக் காரணம் அவனிடமுள்ள சுதந்திரம். எதையும் செய்யவும், செய்யாமலிருக்கவும் சுதந்திரம் உண்டு. நமக்கு முன்னிருக்கும் பலவற்றிலிருந்து ஒன்றைத் தெரிவும் செய்யும் உரிமை நமக்கு உண்டு. இதுவே நமது வரம், இதுவே நமது சாபம். நாம் செய்யும் தெரிவுகள் பல நேரங்களில் தவறாகப் போய் விடுகின்றன. அந்த நேரங்களில் நாம் நமது சுதந்திரத்தை நொந்து கொள்கின்றோம். நல்லது, கெட்டது கலந்ததுதான் உலகம். எதிலும் நல்லதையும் பார்க்கலாம். அதே விஷயத்தில் கெட்டதையும் பார்க்கலாம். இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் நம்மிடம் நீரையும், நெருப்பையும், வாழ்வையும், சாவையும் வைத்துள்ளார். அதிலே நமக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தையும் நம்மிடமே கொடுத்துள்ளார். நமக்கு பகுத்தறியும் திறன் கொடுத்த இறைவன், அவருக்கு உகந்ததையே தீர்மானிக்க அழைப்பு விடுக்கின்றார்.

தொடக்கத்திலே ஆதாமுக்கும், ஏவாளுக்கும் சுதந்திரம் கொடுத்தார். அதேவேளையில், மரத்தின் கனியை உண்ணாதே என எச்சரிக்கையும் கொடுத்தார். மனிதன் அதை மீறயதால், தண்டனையை பெற்றுக் கொண்டான். மனிதன் தீய இச்சைக்கு ஆளானால் துன்பத்தை அனுபவிக்க நேரிடும் என்பதை இறைவன் அங்கே உணர்த்துகின்றார். ஊதாரி மைந்தன் உவமையிலும் தந்தை அவனது சுதந்திரத்தை கொடுக்கின்றார். அவன் தேர்ந்தெடுத்ததோ அழிவின் பாதை. இறுதியில் அதன் வழியாக வாழ்க்கையின் அனுபவத்தைப் பெறுகின்றான். நன்மைக்கும், தீமைக்கும் இடையே எடுக்கும் முடிவுகளிலே நாம் சிறப்பாக செயல்பட வேண்டும். உறுதிபூசுதலின் வழியாக தூயஆவியின் வரங்கள் நமக்கு பொழியப்பட்டுள்ளன. அதன் வழியாக நாம் இறைவனுக்குந்தவற்றை, நன்மையானவற்றை தேர்ந்தெடுக்க வேண்டும். நம் வாழ்க்கை நாம் மேற்கொள்ளும் முடிவுகளால்தான் தீர்மானிக்கப்படுகிறது. ஆதலால் நன்மையால் தீமையை வென்றிடுவோம். அதற்கான அருள் வேண்டி, இப்புனிதத் திருப்பலியில் இணைந்திடுவோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |


**அருள்தந்தையர்**

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை
அருள்தந்தை அந்தோணி மரிய ஜோசப் (antony.m.joseph@catholic.org.sg) - உதவித் தந்தை &
Spiritual Director to the Archdiocesan Commission for the Apostolate of Tamil-Speaking (ACTS)

**பங்கு அலுவலகம்**

(ololsec@gmail.com)
இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore


அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.